## * ஈழத் தமிழ் மக்களுக்கு தமிழகத்தில் பண்பாட்டு மையம்
## * மதுரகவி பாஸ்கரதாசுக்கு மதுரையில் நினைவு மண்டபம்
## * சுற்றுலாத் துறைக்கு ரூ. 153.95 கோடி ஒதுக்கீட்டிற்கு வரவேற்பு

# சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கைகள் விவாதத்தில் டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ., பேச்சு

**சென்னை:** 2013-14ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறைகளின் மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.ராமச்சந்திரன் பேசியதாவது:

கலையும், பண்பாடும் மனித இனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளன. தமிழகத்தில் தொன்மையான கலை வடிவங்களையும், தமிழ் பண்பாட்டினையும் எதிர்கால தலைமுறையினர் தெரிந்து கொள்ளும் வகையில் அவற்றை ஆவணப்படுத்த வேண்டும். தமிழக சமூக தொல்லியல் பண்பாட்டு அரசியல் வரலாற்றை எழுத பேராசிரியர் மு.வரதராஜன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டன. அந்தப் பணிகள் அப்படியே நின்றுபோய்விட்டன. மீண்டும் வரலாற்றுக் குழு அமைத்து, தமிழ்நாட்டில் முழுமையான வரலாறு எழுதப்பட வேண்டும்.

அரசு இசைக் கல்லூரி மற்றும் மாவட்ட அரசு இசைப் பள்ளிகளில் பரதநாட்டியம், கர்நாடக இசை, நாதசுவரம், வயலின் போன்ற கலைகள் மட்டும்தான் பயிற்றுவிக்கப் படுகின்றன. அவற்றோடு, தெருக்கூத்து, பறை, தோல்பாவைக்கூத்து, வில்லிசை, மயிலாட்டம், கரகாட்டம் போன்ற அழிந்துவரும் கிராமப்புற கலைகளும் பயிற்றுவிக்கப்பட வேண்டும்.

பூர்வீக குடிகளான பழங்குடியின மக்களின் கலை, இசைக் கருவிகள் அழியும் அபாயத்தில் உள்ளன. அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மேலும், அரசு நிகழ்ச்சிகளில், கோயில் விழாக்களில் கிராமப்புற கலைகள் ஊக்கப்படுத்தப்பட வேண்டும். இதன் வாயிலாக கிராமப்புற கலைகள் வாழ வழிவகுக்கப்பட வேண்டும்.

வயதில் மூத்த, நலிந்த நிலையில் இருக்கும் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவித் தொகையாக ரூ. ஆயிரம் வழங்கப்படுகிறது. அதை ரூ. 3 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். அரசு இசைக் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித்தொகை ரூ. 500 என்பதை ரூ. ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். இசைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை ரூ. 400 என்பதை ரூ. 800 ஆக உயர்த்தித் தரவேண்டும்.

இந்தியத் திரைப்படத் துறையின் நூற்றாண்டு விழா மத்திய அரசால் இம்மாதம் 25ம் தேதியிலிருந்து 30ம் தேதி வரை தலைநகர் டில்லியில் கொண்டாடப்படுகிறது. இதில் தமிழ் திரைப்படங்களை திரையிடாமல் முற்றிலுமாக மத்திய அரசு புறக்கணித்துள்ளது. இதனை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வன்மையாகக் கண்டிக்கிறேன். தொடர்ந்து தமிழக மக்களையும், தமிழக மீனவர்களையும் புறக்கணித்து வரும் மத்திய அரசு தொடர்ந்து தமிழ்த் திரைப்படங்களையும் புறக்கணித்து வருகிறது. ஆகவே, சட்டமன்றத்தில் இதனைக் கண்டித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.

தமிழில் முதலில், பேசும் திரைப்படமான காளிதாஸூக்கு பாடல்கள் இயற்றியவரும், காந்தியடிகளால் பாராட்டப்பட்டவருமான மதுரகவி பாஸ்கரதாஸ், பல தலைமுறைக் கலைஞர்களையும், பெண் கலைஞர்களையும் ஊக்கப்படுத்தி திரைப்படத் துறைக்கு பெருமை சேர்த்தவர். அவரது கலைச் சேவையைப் பாராட்டி மதுரையில் அவரது பெயரால் நினைவு மண்டபம் அமைக்க வேண்டும்.

சென்னை எழும்பூர் ரயில் நிலையம் அருகில், சிங்களர்களுக்கு சொந்தமான மகா போதி மடம் ஒன்று செயல்படுகிறது. ஆனால் இன அழிப்பு யுத்தத்தில் தங்களுடைய கலாச்சார பாரம்பரியம் அனைத்தையும் இழந்து நிற்கக் கூடிய ஈழத்தமிழர்களுக்கு சென்னையில் ஒரு பண்பாட்டு மையம் இல்லை.

சிதம்பரத்தில், சைவ மடத்திற்குச் சொந்தமாக மடமும், குளமும் மற்றும் பல ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. இந்த இடம் தஞ்சை மராட்டிய மன்னன் சித்த மருத்துவ

சிகிச்சைக்காக இலங்கை சென்றபோது, இலங்கை பரராஜசோழன் என்ற யாழ்பாண மன்னருக்கு செப்புப் பட்டயம் மூலம் வழங்கிய இடமாகும். இந்த இடம் வழங்கப்பட்டதற்கான ஆதாரங்கள் உள்ளன. எனவே அந்த மடத்தையும், நிலத்தையும் அரசு கையகப்படுத்தி, அங்கு இன அழிப்புப் போரால் எல்லாவற்றையும் இழந்து நிற்கும் ஈழ மக்களுக்கு, கலாச்சார பாரம்பரிய பண்பாட்டு மையத்தை தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாறு எழுதப்படுவதற்கு அடிப்படைச் சான்றாக இருப்பது தொல்லியல் சான்றுகளாகும். இந்தியா முழுவதும் பரந்து கிடக்கின்ற கல்வெட்டுகளில் 70 விழுக்காடு தமிழ் கல்வெட்டுகள் உள்ளன. மத்திய அரசின் கட்டுப்பாட்டில், மைசூர் தொல்லியல் துறையில் சுமார் 50 ஆயிரம் தமிழ் கல்வெட்டுகள் கடந்த 100 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருக்கின்றன. இதை டிஜிட்டல் முறையில் பதிப்பித்து வெளியிட இதற்கான ஒப்பந்தம் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு போடப்பட்டது. ஆனால் இதுவரையில் அது நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, அதை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். தொல்லியல் துறையிலும், அருங்காட்சியகத் துறையிலும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

பழனி அருகே பொந்தல் கிராமத்தில் பேராசிரியர் ராஜன், அகழ்வாய்வு செய்து 4 மண்பாண்டங்களை எடுத்தார். அதில் நெல் மணிகள் கிடைத்தன. அதில் இரண்டு மண்பாண்டங்களில் உள்ள நெல் மணிகளை, அமெரிக்காவில் கார்பன் பரிசோதனை செய்தபோது, அவற்றின் காலம் கி.மு. 450 என்றும், கி.மு. 490 என்றும் கண்டறியப்பட்டது. மீதமுள்ள 2 மண் பாண்டங்களிலிருந்த நெல் மணிகள் இதுவரை ஆய்வு செய்யப்படவில்லை. அதற்கு தொல்லியல் துறையிலே போதிய நிதி ஒதுக்கீடு இல்லை என்பது காரணமாக இருக்கிறது. அதை ஆய்வு செய்தால் நம்முடைய வரலாற்றுத் தொன்மையை அறிய முடியும்.

மேலும், ஈரோடு மாவட்டம் கொடுமலையிலும், மதுராங்கத்திலும் பல ஆண்டுகளாக பழமை வாய்ந்த புதைப் பொருட்கள் அகழாய்வுகள் செய்யப்படாமல் உள்ளன. தமிழ்நாட்டில் சுமார் 2 ஆயிரம் இடங்களில் அகழாய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்பட்டன. இவைகளில் பெரும்பாலான இடங்கள் இன்றைக்கு ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அகழாய்வு செய்த பணிகளை துறையின் சார்பாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கும்பகோணம் அருகே உடையாலூரில் ராஜராஜசோழனுடைய சமாதி இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த ஊரில் சோழர்களுடைய ஆயுதப் பட்டறையும் இருப்பதாக இருக்கிறது. இந்த இடத்திலே அகழாய்வுப் பணிகளை மேற்கொள்வதோடு, ராஜராஜசோழனுடைய சமாதியும் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில் மிகவும் பழமை வாய்ந்த 33 புராதனக் கோயில்கள் உள்ளன. அவற்றை பொதுப் பணித் துறையால் புனரமைக்கப்படும்போது கல்வெட்டுகள், புராதனச் சின்னங்கள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் அழிகின்ற அபாயம் ஏற்படுகிறது. ஆகவே இவற்றை தொல்லியல் துறையின் மூலமாக புனரமைக்க வேண்டும்.

தமிழகத்தில் ஆயிரத்து 170 கிலோ மீட்டர் நீளமுள்ள கிழக்குக் கடற்கரை பகுதி, கோயில் நகரங்கள், வரலாற்று நினைவுச் சின்னங்கள், மலைவாழ் இடங்கள், அருவிகள், சமவெளிகள், சதுப்பு நில மரக்காடுகள், வழிபாட்டு தலங்கள், வரலாற்றில் இடம்பெற்ற கோயில்கள் என சுற்றுலாத் தலத்தின் சொர்க்க பூமியாக தமிழகம் திகழ்கிறது.

2013-14ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலே சுற்றுலாத் துறைக்கு ரூ. 153.95 கோடியை தமிழக அரசு ஒதுக்கியிருப்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம். மாமல்லபுரத்தில் உலகத் தரத்திலே கடல்வாழ் உயிரினக் காட்சியகம் 250 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுவதும் பாராட்டுக்குரியது.

உலகம் முழுவதிலிருந்தும், தெற்காசிய நாடுகளிலிருந்தும் மருத்துவச் சுற்றுலாவிற்காக இந்தியாவை நோக்கி வந்துகொண்டிருக் கிறார்கள். சென்னை, ஆங்கில மருத்துவத்தினுடைய மையமாக மாறியுள்ளது. ஆயுர்வேத மருத்துவச் சுற்றுலா மையமாக கேரள மாநிலம் மாறியுள்ளது. தமிழ்நாட்டின் பாரம்பரிய மருத்துவ முறைகளான சித்த மருத்துவமுறை மற்றும் ஆயுர்வேத மருத்துவ முறைகளையொட்டி மருத்துவச் சுற்றுலா மையங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளைத் தமிழகத்தில் ஏற்படுத்தினால்,

அது அன்னியச் செலாவணியை ஈட்டித் தருவதோடு, ஏராளமான புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும். மூலிகை விவசாயிகளுக்கு நல்ல லாபத்தை ஈட்டித்தரும். ஆகவே அத்தகைய சுற்றுலாக்களை தமிழகத்தில் மேம்படுத்த வேண்டும்.

**சுற்றுச்சூழல் சுற்றுலா**

இன்றைய நகரமய, சமூகப் பொருளாதார காரணங்களால் மக்கள் மனஅழுத்தத்திற்கு ஆட்பட்டவர்களாக இருக்கிறார்கள். பாரம்பரியமாக நீண்ட கடற்கரைப் பகுதியையும், மேற்கு, கிழக்கு தொடர்ச்சி மலைகளைக் கொண்ட வனப் பகுதிகளையும் கொண்ட மாநிலமாக தமிழகம் இருக்கிறது. இந்தப் பிரதேசங்களில் இயற்கைச் சுற்றுலாத் தலங்களை அமைப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், இதன் மூலமாக அன்னியச் செலாவாணியையும், புதிய வேலைவாய்ப்புகளையும் உருவாக்க முடியும்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை அலையாத்திக் காடுகளைச் சுற்றுலாத் தலமாக அறிவித்து இருப்பதை வரவேற்கிறோம். அதுபோல அங்கு படகுக் குழாம் ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும். தளி சட்டமன்றத் தொகுதியில் கடல் மட்டத்திலிருந்து 3 ஆயிரத்து 500 அடி உயரத்தில் உள்ள பெட்டமுகிலயத்தை புதிய சுற்றுலாத் தலமாக மாற்றித் தரவேண்டும். அதேபோல நூறுஒந்துசாமி மலை என்ற ஆன்மீக தலத்தில் சுற்றுலா பயணிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகிறார்கள். அங்கே குடிநீர் வசதி, சாலை வசதிகள் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டும்.

இவ்வாறு டி.ராமச்சந்திரன் பேசினார்.